# ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 வைகாசி மாதம்

# “பதினெண்சித்தர் மடம் பயிற்சி முகம் (முகாம்)”

“பதினெண்சித்தர்களின் மரபுப்படி அல்லது தத்துவப்படி ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பிறப்பையும், வாழ்வையும் பற்றி எண்ணா விட்டாலும்; கட்டாயமாகவும், அவசியமாகவும் தன்னுடைய இறப்பைப் பற்றியும், அதன் பின் உள்ள நிலைகளைப் பற்றியும் எண்ணியேயாக வேண்டும்.”




அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞாணாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.



இந்து இலக்கியக் கழக வெளியீடு

# உள்ளுறை

1. **"பயிற்சி முகாம் பற்றிய அறிவிப்பு"** - பதினெண்சித்தர் மடத்தின் பயிற்சிகளை வழங்கும் முகமாக நடத்தப்படப் போகின்ற பயிற்சி முகம் பற்றி குருதேவர் அவர்கள் 30-04-1990இல் தலைமைப்பீடத்திலிருந்து அனைத்து அடியான்களுக்கும் வழங்கிய நெடிய அறிவிப்புக் கட்டுரை.

2. **"பதினெண்சித்தர் மடம், பீடம் பயிற்சிப்பள்ளி"** - பயிற்சி முகம் (முகாம்) என்றால் என்ன என்பதை விளக்கிடும் வண்ணமாக மார்ச்சு 1990இல் குருதேவர் அவர்கள் அனைத்து அடியான்களுக்கும் விடுத்த கட்டுரை.

**"பதினெண்சித்தர் நெறியெனும் வற்றாத ஆற்றின் இருகரைகளிலும் பயிராகக் கூடிய பயிரினங்களின் விளைச்சல்தான் இம்மண்ணுலகின் தத்துவங்களும், செயல் சித்தாந்தங்களும் ஆகும். மதங்கள் எனும் வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் தங்களிடம் உள்ள விளைச்சல் பொருள்களைப் பற்றி என்னென்ன கூறி விற்றாலும் சரி, அவையனைத்தும் சித்தர் நெறியெனும் ஆற்றின் இருகரைகளிலும் விளைந்தவையேயாகும். அதாவது எந்த வியாபாரி என்ன கூறி எந்த இடத்தில் எந்த விளைச்சல் பொருளை விற்றாலும் அவை அனைத்தும் சுவையிலும், பயனிலும் ஒரே மாதிரியாகத்தான் இருந்திடும். எனவே, எந்த மதமானாலும் சரி, அது மனித சமுதாயத்திற்கு நன்மை பயப்பதாகவேதான் இருக்குமே தவிர, வேறு எதுவாகவும் இருக்காது..." - *குருபாரம்பரியம்.***

# <u>பயிற்சி முகாம் பற்றிய அறிவிப்பு</u>

1) மத உணர்வும், மத எண்ணமும், மதச் சிந்தனையும் நல்ல முழுமையான விழிச்சி நிலைகளையும், எழிச்சி நிலைகளையும், செயல்புரட்சிக்குரிய பயிற்சி நிலைகளையும், ஆக்கப் பணிக்குரிய முயற்சி நிலைகளையும் பெற்றிடுவதற்காகத்தான் பயிற்சி முகாம்கள் அனுதிக் காலம் தொட்டு நிகழ்த்தப் படுகின்றன. இந்த வரலாற்றுப் பேருண்மையினை இன்றுள்ள நமது தமிழ்ச் சமுதாயத்தில் கணிசமானவர்களாவது தெரிந்து, புரிந்து செயல்பட்டிடல் வேண்டும். அப்பொழுதுதான் பதினெண்சித்தர் மடம் நிகழ்த்துகின்ற பயிற்சி முகாம்கள் அருளுலகின் கண்களாகப் பயன்பட்டிடும்.

2) **‘<u>பயிற்சி முகம்</u>’** என்ற தூய செந்தமிழ்ச் சொல்தான் காலப்போக்கில் வழக்காற்றில் ‘<u>பயிற்சி முகாம்</u>’ என்ற நீட்டல் விகார இலக்கணத்திற்குரிய தமிழ்ச் சொல்லாயிற்று. எனவே, ‘பயிற்சி முகாம்’ என்ற சொல்லே அன்னிய மொழிச் சொல் என்று பலர் கூறுவதை நம்மவர்கள் ஆங்காங்கே உடனடியாகக் கண்டித்தாக வேண்டும்.

3) இந்த பயிற்சி முகம் என்ற சொல்லுக்கு நேரடியான பொருள்: ஒருவன் எந்தப் பயிற்சியைச் செய்வதென்றாலும் அதற்கு முகம் போன்று அதாவது தலை போன்ற ஓர் அநுபவத்தைப் பெற்றேயாக வேண்டும். அதற்குக் குருபீடம், ஆச்சாரிய பீடம், மடம், ... என்று உள்ள நிறுவன நிருவாகத்திடம் அல்லது தனிப்பட்ட அருளாளரிடம் இட்டும் தொட்டும் சுட்டியும் தேவையான அடைவுகளையும், நுகர்வுகளையும், படிப்பினைகளையும், வழிவகைகளையும், துணைகளையும் பெற்றிடுதல் வேண்டும். இந்த அநுபவத்தைப் பெறுகின்ற நிகழ்ச்சிக்குரிய முயற்சி நிலைதான் ‘பயிற்சி முகம்’ எனப்படுவது.

4) இதுவரை பெரிய பயிற்சி முகங்களும், குருதேவர் சுற்றுப்பயணம் செய்யும் பொழுது அந்தந்த வட்டாரங்களில் சிறிய சிறிய பயிற்சி முகங்களும் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. இவற்றில் பேரார்வத்துடன் கலந்து கொண்டவர்கள் எண்ணற்றவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்களின் செயல்கள் கருத்துக் கண்ணற்றோர் செயல்களாகவே இருக்கின்றன. இதற்குரிய காரண காரியங்கள் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டு அதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பேருண்மைகளில் ஒரு சிலவே இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

(i) பயிற்சி முகம் என்றால் ஏதோ ஒரு திருவிழாவிற்கு வருவது போலவே நம்மவர்கள் வந்து செல்கிறார்கள்.

(ii) பயிற்சி முகம் என்றால் குருதேவர் அருகில் இருக்கலாம். குருதேவருடன் நெருங்கிப் பழகலாம் என்ற ஆர்வத்திலேயே வருகிறார்கள்.

(iii) பயிற்சி முகம் என்றால் சான்றிதழ்கள், அச்சிட்ட புத்தகங்கள், கையெழுத்துப் பிறதிகள் கிடைத்திடும் என்ற நம்பிக்கையிலேயே வருகிறார்கள்.

(iv) பயிற்சி முகம் என்றாலேயே குருதேவர் தவம், பூசை, ஞானம், யோகப்பயிற்சி, சேவலோன் கலைப் பயிற்சி, ... முதலியவற்றில் ஏதேனும் சில நிகழ்த்திடுவார். அதில் பங்கு பெறுவதின் மூலம் எப்படியாவது தங்களுக்குக் குறிப்பிட்ட அளவாவது அருளாற்றல் வந்து விடும் என்ற ஆசையிலேயே வருகிறார்கள்.

(v) பயிற்சி முகம்களில் அருவ, உருவ, அருவுருவ, உருவஅருவ நிலைகளில் உள்ள அருளுலகத்தவர்கள்; தாத்தாக்கள் ஆத்தாக்கள் ஆணையின்படியும், அம்மையப்பன்களின் துணையின்படியும் வந்திடுவார்கள்; அவர்களுடைய மனத்தாலும், மெய்தோய்தலாலும், அருட்கொடையாலும் தங்களுடைய பாதிப்புக்கள் அனைத்தும் அகன்றிடும் என்ற கருத்தோட்டத்திலேயே கலந்து கொள்ளுகிறார்கள்.

(vi) பயிற்சி முகம் நடக்கும் பொழுது குருதேவரும், இயக்கச் செயல்வீரர்களும் வழங்கக் கூடிய கருத்துரைகளை ஏறத்தாழ யாருமே குறிப்பெழுதிக் கொண்டு சென்றோ அல்லது நினைவில் நிலைநிறுத்திக் கொண்டு சென்றோ பயன்படுத்துவதில்லை. இது ஒரு பெரிய இழப்பேயாகும். அதாவது, பயிற்சி முகத்தால் நம்மவர்களில் விரல்விட்டு எண்ணிடக் கூடிய அளவு மிகமிகச் சிலரே தயாராகி இருக்கிறார்கள். இது வருந்தத் தக்கது, திருந்தத் தக்கது அல்லது உடனடியாகத் திருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது.

(vii) ஏற்கனவே நம்மவர்கள் தங்களிடம் வைத்துள்ள அச்சிட்ட புத்தகங்களையும், கையெழுத்துப் பிறதிகளாக உள்ள கட்டுரைகளையும், கருத்து விளக்க அஞ்சல்களையும் அடிக்கடி திருப்பித் திருப்பிப் படித்துப் புரிந்து நன்கு நினைவில் நிறுத்திக் கொண்டு பிறருக்கு எடுத்துச் சொல்லவும், செயலில் வெளிப்படுத்திடவும் முற்படாதவர்களாகவே இருக்கிறார்கள், இருக்கிறார்கள், இருக்கிறார்கள். இந்த மந்தநிலை, பொறுப்பற்ற நிலை உடனடியாகத் திருத்தப்பட்டேயாக வேண்டியிருக்கிறது.

(viii) நமது மதவழிப் புரட்சித் திட்டங்கள் செயலுக்கு வரவேண்டுமென்றால் நம்மவர்களில் ஏறத்தாழ எல்லோருமே நமது இயக்கப்பூர்வமான கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல் சித்தாந்தங்களையும் முறையான வரலாற்று அடிப்படையில் தகுந்த இலக்கியச் சான்றுகளுடன் திண்ணைப் பேச்சாகவும், பட்டிமன்ற விவாதமாகவும், சொற்பொழிவாகவும், சாதாரண உரையாடலாகவும் வெளியிட்டேயாக வேண்டும், வெளியிட்டேயாக வேண்டும், வெளியிட்டேயாக வேண்டும். இதற்காகவே, நம்மவர்களுக்குப் பேச்சுக் கலையில் தரம், திரம், திறம் எனும் மூவகை ஆற்றல்களையும் உண்டாக்கியாக வேண்டும். அதற்குரிய வண்ணமே இனிவரும் பயிற்சி முகம்கள் அமைந்திடும். எனவே, நம்மவர்கள் பழைய பயிற்சி முகங்களை நினைவிற் கொண்டு இப்பொழுது நடைபெற

இருக்கின்ற பயிற்சி முகங்களில் பங்கு பெற்றிட முயன்றிடக் கூடாது, முயன்றிடக் கூடாது, முயன்றிடக் கூடாது, முயன்றிடவே கூடாது. **எச்சரிக்கை.**

(ix) கடந்த ஒரு வாரத்திற்குள் பலரிடமிருந்து பயிற்சி முக விண்ணப்ப வேண்டுகோள்கள் வந்துள்ளன. எனவேதான், இந்தப் பயிற்சி முகம் பற்றிய அறிவிப்புத் திருவோலை அனைவருக்கும் அனுப்பப்படுகிறது. அதாவது, பயிற்சி முக விண்ணப்பத் தாள்கள் ஏற்கப்படுவதற்கு முன்பே இதுபோன்று ஒருசில அறிவிப்புக்கள் அனைவருக்கும் அனுப்பப்படும். அவை தயாரிக்கப்படுவதற்கும், அஞ்சலில் அனுப்பப்படுவதற்கும் ஆகக் கூடிய செலவாக ஒவ்வொருவரும் ரூ.25/- முதல் ரூ.50/- வரை முன்கூட்டியே அனுப்பி வைக்க வேண்டும். பணம் அனுப்பும் இரசீது, தலைமைப்பீடத்தில் பணம் பெற்றுக் கொண்டதற்கான இரசீது முதலியவைகளைப் பத்திரமாக வைத்திருத்தல் வேண்டும். இல்லாவிட்டால், மறுபடியும் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கலாம். எச்சரிக்கை.

**குறிப்பு**:- உடனடியாக ரூ.10/- அல்லது ரூ.15/-க்கு அஞ்சல் தலைகள் அனுப்பி வைத்தால் நல்லது. அப்பொழுதுதான் எல்லா வகையான அஞ்சல் தொடர்புகளையும் நிகழ்த்திட முடியும்.

5) பயிற்சி முகத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் இப்போது நடைபெறப் போகிற பயிற்சி முகங்கள் தொடர்ந்து வாராவாரம் வெள்ளி, சனி, ஞாயிறு என்ற மூன்று நாட்கள் மட்டும் குறைந்தது பத்துப் பத்துப் பேர்களுக்காவது நிகழ்த்தப்படுவதாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எனவே, யாரும் தங்களுக்குத் தலைமைப்பீடம் அறிவிக்கின்ற பயிற்சி முக நாட்களை முன்னரோ அல்லது பின்னரோ தள்ளிப் போட முயலக் கூடாது. அல்லது, குறிப்பிட்ட நாட்களில் நடைபெறும் பயிற்சி முகத்திற்குத்தான் வரமுடியும் என்று எண்ணக் கூடாது. ஏனென்றால், அருட்போர் அறிவிக்கப்பட்ட பிறகு அருளுலக ஒப்புதலும், அருளாட்சி நாயகத்தின் துணையும் பெற்றே இந்தப் போர்க்காலப் போர்க்கோலப் பயிற்சி முகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இதன்படி வழங்கப்படும் அனைத்து வகையான சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் விருப்பமுடன் முழுமனதுடன் ஏற்றுச் செயல்படும் பக்குவமுடையவர்களாக இருக்க வேண்டும் அனைவரும்.

6) இந்தப் பயிற்சி முகத்தில்; 'நாம் மிகப் பெரிய சாதனைகளையெல்லாம் சாதித்திருந்தும் ஏன் நம்மால் மக்கள் தொடர்பை மிகுதியாகப் பெற முடியவில்லை?', என்ற வினாவிற்கு உரிய விடையை விவாதித்தாக வேண்டும். எனவே, நிகழவிருக்கின்ற பயிற்சி முகம் அ.வி.தி. பணியாற்றக் கூடிய அருளாளர்களை மட்டும் தயாரிப்பதற்காகவோ அல்லது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், தமிழின மொழி மத விடுதலை இயக்கத்தையும் நேரடியாக அரசியல் கட்சிகளைப் போல வளர்க்கக் கூடிய செயல்வீரர்களை உருவாக்குவதற்காகவோ மட்டும் அமைக்கப்பட வில்லை. அதாவது, பதினெண்சித்தர் மடத்துக்குரிய 48 வகையான நிறுவன நிருவாகங்களையும் கூடுமானவரை ஏட்டறிவாகவாவது தெரிந்திருக்க வேண்டும் நம்மவர்கள் என்ற பொதுநோக்கில்தான் இப்பொழுது பயிற்சி முகங்கள் தொடங்கப்பட இருக்கின்றன.

7) இப்பொழுது துவக்கப்பட இருக்கும் பயிற்சி முகத்தில் பங்கு பெற இருப்பவர்கள் இதுவரை அச்சாகி வெளிவந்துள்ள குருதேவர் அறிக்கைகளையும், புத்தகங்களையும் தங்களுடைய சொந்தத்துக்காக விலைக்கு வாங்கி வைத்துக் கொண்டு; அவற்றை ஒருசில முறையாவது முழுமையாகப் படித்தவர்களாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நமது வரலாறு, இலக்கியம், தத்துவம், செயல் சித்தாந்தம், இந்துமத - ஹிந்துமத வேறுபாடு, ... முதலியவைகள் பற்றிப் பயிற்சி முகத்தில் நடக்கக் கூடிய உரை, உரையாடல், சொற்பொழிவு, விவாதம், ... முதலியவைகளைப் பயிற்சி முகத்தில் பங்கு பெறுகிற அனைவருமே நன்கு கவனத்தோடு ஏற்றுப் புரிந்து, உணர்வோடு ஒப்புக் கொள்ள முடியும் அல்லது பயனடைய முடியும். இதை யாரும் வேறு விதமாக நினைத்து விடக் கூடாது. அதாவது, பயிற்சி முகத்திற்கு வருகிறவர்களிடம் கட்டாயமாகப் புத்தகங்கள் விற்கப்படுகின்றன என்று எண்ணிடக் கூடாது.

8) பள்ளிக் கூடம் செல்லும் மாணவர்களைப் போலப் பயிற்சி முக வகுப்புக்கு வரக் கூடியவர்கள் கட்டாயமாகத் தாங்கள் விலைக்கு வாங்கியிருக்கக் கூடிய அனைத்து வகையான புத்தகங்களையும் எடுத்து வரவேண்டும். இதேபோலக் கட்டாயமாகக் கெட்டியான அட்டை போட்ட மூன்று நோட்டுப் புத்தகங்களையும் கொண்டு வர வேண்டும். தமிழ் இனம், மொழி, மதம் எனத் தலைப்பிட்டு எடுத்து வரவேண்டும். இதனால் பயிற்சி முகத்தில் கூறக்கூடிய கருத்துக்களில் இருந்து அவரவர் நினைவாற்றலுக்கு ஏற்ப மேற்படி மதம், இனம், மொழி ஆகிய மூன்று துறைகளைப் பற்றிய கருத்துக்களையும், செய்திகளையும் அந்தந்த ஏட்டில் பிரித்துப் பிரித்துக் குறித்துக் கொள்ளலாம். இப்படிக் குறித்துக் கொள்வதின் மூலம் நமது பயிற்சி முகத்தில் பயிற்சி பெறுகிற எல்லோருமே **நமது முப்பெரும் கொள்கைகளை (The Policy of Trinity, The Principle of Trinity), முப்பெரும் கோட்பாடுகளை மிகத் தெளிவாக, முழுமையாகத் தனித்தனியாகப் பிரித்துப் பிரித்துப் பிறரிடம் எடுத்துக் கூறவும், விவாதிக்கவும், முடிந்த வரை மேடைப் பேச்சாக அதாவது சொற்பொழிவாக வழங்கவும் தகுதி உள்ளவர்களாக ஆகிடுகிறார்கள் அல்லது ஆகிடுவார்கள்.**

அதாவது, இன்றைய நிலையில் நமது நாட்டில் இனம், மொழி, மதம் என்ற மூன்றில் ஏதாவது ஒன்றையோ அல்லது இரண்டையோ மட்டும் விரும்புகிறவர்கள்தான் பெரும்பாலானவர்களாக இருக்கிறார்கள். அதாவது, நமது தமிழர்களிலேயே,

“*எந்த மொழியை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ளலாம்; தாய்மொழி என்ற வெறி தேவையில்லை*” என்று கூறுபவர்களும்;

“*தமிழினம் என்ற வெறியோ, பற்றோ, பாசமோ தேவையில்லை, எல்லா இனத்தவரும் ஒன்றுதான். எல்லா இனத்தவர்களோடும் நாம் சேர்ந்து வாழ வேண்டும். நமது தமிழினத்தவர்கள் மட்டும் மற்ற இடங்களுக்குச் சென்று பிற இனத்தவர்களை அடிமைப்படுத்தவில்லையா?, ஆதிக்கம் செலுத்தவில்லையா?, பிற இனத்தவர்களின் நலங்களை விரும்பிய அளவு அல்லது முடிந்த அளவு பகிர்ந்து கொள்ளவில்லையா?*

*அதாவது சுரண்டவில்லையா?"* என்று கண்மூடித்தனமாக எண்ணுபவர்களும்;

*"நமக்கென்று எந்த மதம் இருக்கிறது, இன்றைக்கு நாட்டில் உள்ள ஹிந்து மதத்தில், சமசுக்கிருத மொழியில்தானே எல்லா மந்திரங்களும், சாத்திரங்களும், வேதங்களும் இருக்கின்றன?; பார்ப்பான்தானே ஆச்சாரியாராக, மடாதிபதியாக, குருவாக, கோயில்களில் அர்ச்சகர்களாக, வீடுகளிலே வந்து எல்லாச் சடங்குகளையும் செய்து வைக்கும் புரோகிதர்களாக இருக்கிறார்கள்?. எனவே, பார்ப்பான் காலிலே விழுகவும் அவனது சமசுக்கிருதத்திற்கு அடிபணியவும்தான் நமது மதம் வழி வகுக்கிறது. அது தெரிந்தும் நாம் மதப்பற்றுடன் இருக்க வேண்டும் அல்லது மத நம்பிக்கையுடன் இருக்க வேண்டும், அல்லது மதவாழ்வு வாழ வேண்டும் என்று கூறுவது முட்டாள்தனமாகும், பைத்தியக்காரத்தனமாகும்; தமிழரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகும்; தமிழரைப் பார்ப்பான் சுரண்டுவதற்கு வழிவகுப்பதாகும்; என்றென்றும் தமிழன் பகுத்தறிவுப் பூர்வமாகச் சிந்திக்க முடியாமல் செய்வதாகும்...."* என்று முரட்டுத்தனமாக மதத்திற்கு எதிராக விவாதம் செய்பவர்களாகவுமே இருக்கிறார்கள்.

இந்த மூன்று வகையினர்களில் மூன்றையுமே அதாவது இனம், மொழி, மதம் என்ற மூன்றையுமே வெறுப்பவர், மறுப்பவர், எதிர்ப்பவர் இல்லை. மதத்தையாவது அல்லது மொழியையாவது அல்லது இனத்தையாவது நம்புகிறவர்கள் மூவரில் கணிசமானவர்கள் இருக்கின்றார்கள். இதன்படிப் பார்த்தால் நம்முடைய பயிற்சி முகம்களில் தயாராகிறவர்கள்; தாங்கள் சந்திக்கின்றவர்கள், மேற்படி இனம், மொழி, மதம் என்ற மூன்றில் எதை விரும்புகிறார்கள் என்பதை நன்கு ஆராய்ந்து தெரிந்து புரிந்து கொண்டு அவர்களுடைய விருப்பப்படியே அவர்கள் செயல்படுவதற்குத் தேவையான கருத்துக்களையும், செயல்திட்டங்களையும் வழங்கிடலாம். அதாவது நமது தமிழர்களுக்காகத் தமிழின விடுதலை இயக்கம், தமிழ்மொழி விடுதலை இயக்கம், தமிழர் மத விடுதலை இயக்கம் என்ற மூன்று இயக்கங்களைத் தனித்தனியாகவே வளர்க்கலாம். இதனால் ஏறத்தாழ

எல்லாத் தமிழர்களுமே நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ் உள்ள இம் மூன்று இயக்கங்களில் ஏதாவது ஒன்றில் சேர்ந்து செயல்படக் கூடிய அரிய வாய்ப்பு உண்டாகும். அதன்மூலம் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் முயற்சித்தபடி அருளாட்சி அமைப்புப் பணி மிகச் சிறப்பாக நிறைவேறிடும்.

அதாவது, இந்து மறுமலர்ச்சி இயக்கம் ஒரு முப்பெரும் இயக்கங்களின் தலைமை இயக்கமாகச் செயல்பட முடியும்; அதனால் தமிழர்கள் இன உணர்வு, மொழியுணர்வு, மதவுணர்வு எனும் முப்பெரும் உணர்வுகளையும் பெற்று; ஒன்று திரண்டு; ஒற்றுமைப்பட்டு; ஒருமைப்பாட்டுடன் செயல்படக் கூடிய நல்ல சூழ்நிலை உருவாகிடும். இதற்காகத்தான் நமது பயிற்சி முகத்தில் பங்கு பெறுகிறவர்களில் எந்த விதமான வற்புறுத்தலும் இன்றி அவரவர் தங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப தமிழினம், மொழி, மதம் எனும் மூன்று துறைகளிலும் தங்களைத் தயாரித்துக் கொள்ளலாம். அதாவது, எவரும் கட்டாயமாக மூன்று துறைகளிலும் செயல்பட்டாக வேண்டுமென்று வலியுறுத்தலோ, வற்புறுத்தலோ பதினெண்சித்தர் மடத்தில் இல்லை; பீடத்தில் இல்லை என்பதேயாகும்.

9) இந்தப் பயிற்சி முகத்தில்தான் பதினெண்சித்தர்களின் மரபுப்படி அல்லது தத்துவப்படி ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பிறப்பையும், வாழ்வையும் பற்றி எண்ணாவிட்டாலும்; கட்டாயமாகவும், அவசியமாகவும் தன்னுடைய இறப்பைப் பற்றியும், அதன் பின் உள்ள நிலைகளைப் பற்றியும் எண்ணியேயாக வேண்டும் என்ற தத்துவம் விளக்கப்படுகிறது. இதற்குரிய வண்ணமே எல்லாவித ஏட்டறிவுகளும், பட்டறிவுகளும், பயிற்சி முயற்சிகளும் நிகழவிருக்கும் பயிற்சி முகங்களில் வழங்கப்பட உள்ளன. இந்தத் தெளிவான செயல்திட்டத்தால்தான் நமது பயிற்சி முகத்திற்கு வரக்கூடிய எல்லோருமே கட்டாயமாக

(a) சன்னிதான உடை வைத்திருக்க வேண்டும்,
(b) திரிசூலம், மயில்பீலி, மெய்ஞ்ஞானக்கொடி ஆகிய மூன்றும் வைத்திருக்க வேண்டும்,

(c) 21 உருத்திராட்சங்களைக் கொண்ட ஒரு மாலையாவது வைத்திருக்க வேண்டும்.

(d) தங்கள் தங்களுக்கென்று ஒரு திருநீறுப் பெட்டி, குங்குமப் பெட்டி, மஞ்சள் பெட்டி (துணியால் தைத்த தனித்தனிப் பையாகவாவது) வைத்திருக்க வேண்டும்.

(e) அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவின் ஒரு புகைப்படமாவது வைத்திருக்க வேண்டும். இதேபோல் குருதேவரின் படமும் வைத்திருக்க வேண்டும்.

(f) எல்லோரும் தங்களுடைய இ.ம.இ. உறுப்பினர் அட்டையைக் கொண்டு வர வேண்டும்.

(g) எல்லோரும் தங்களுடைய அருட்பட்டங்கள் அனைத்தையும் மிகத் தெளிவாகக் கையகலம் உள்ள (Post Card Size) ஓர் அட்டையில் அழகாக எழுதிக் கொண்டு வர வேண்டும்.

... முதலியவற்றுடன் பயிற்சி முகத்தில் பங்கு பெறுபவர்களுக்குத்தான் குண்டலினி ஆற்றல், அதற்குரிய மோகமுறை, போகமுறை, யோகமுறை எனும் மூன்று முறைகளில் அவரவர்களுக்குரிய முறையில் விருப்பம் போல் வழங்கப்படும்.

10) இந்தப் பயிற்சி முகத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு அல்லது வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு என்று தொடர்ந்து 3 அல்லது 4 நாட்கள் குருதேவர் அவர்களுடன் தங்கிப் பயிற்சி பெறும் வாய்ப்பு வழங்கப் படுகிறது. எனவேதான், ஒவ்வொரு பயிற்சி முக வகுப்பிற்கும் கூடுமானவரை பத்து நபர்களுக்கு மேல் அநுமதிக்கப்-படுவதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது; மேலும், இந்தப் பயிற்சி முகத்தில் பங்கு பெற்றுச் செல்பவர்கள் தங்களுடைய அன்றாட வாழ்வில் பூசை, தவம், ஞானம் என்ற மூன்று வழிகளில் ஏதாவது ஒரு வழியில் அருளை அநுபவப் பொருளாக அடையவும், பிறர்க்கு வழங்கவும் முற்படுகின்றவர்களாகத் தயாரிக்கப்படல் வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குரிய பயிற்சி நிலைகளையும், முயற்சி நிலைகளையும் ஒவ்வொருவரும் பெற்றுச் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் மேலே பட்டியலிட்டுக் காட்டியபடி ஏழுவகைப்பட்ட

அருட்பணிப் பொருட்களேயும் (9வது எண்ணிட்ட பகுதியில் கூறப்பட்டிருக்கிறது) கட்டாயமாகக் கொண்டு வர வேண்டும் என விதி செய்யப்பட்டிருக்கிறது.

11) நம்மவர்கள் பதினெண்சித்தர்கள் வகுத்துள்ள சட்டதிட்டக் கட்டுப்பாடுகளேயும்; விதி நெறிமுறைகளேயும் முழுமையாகப் பின்பற்றி (1) ஞானக்காட்சி காணல், (2) அருட்கணிப்புச் செய்தல், (3) அருள்வாக்குக் கூறல், (4) பரிகாரங்கள் செய்தல், (5) அருளாளியாகச் செயல்படுதல், (6) புத்துயிர்ப்புச் செய்தல், (7) மெய்ஞ்ஞானக்கொடி ஏற்றுதல், (8) ஐந்தீ வேட்டல் முறைக்குரிய ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி முதலியவற்றைச் செய்தல், (9) வார வழிபாட்டுக் கூட்டங்கள் நடத்துதல், (10) பருவ பூசை நிகழ்த்துதல், ... முதலிய பணிகளே நிறைவாகச் செய்வதற்குரிய ஏட்டறிவும், பட்டறிவும், பயிற்சி முயற்சிகளும் இந்தப் பயிற்சி முகத்தில் ஒரு கணிசமான அளவாவது (குறிப்பிட்ட அளவாவது) வழங்கப்பட்டிடக் கூடிய செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. எனவேதான், இந்தப் பயிற்சி முகத்திற்கு விண்ணப்பித்திருக்கின்ற எல்லோரையுமே அப்படியே முழுமையாக ஏற்றிட முடியாத சூழ்நிலே இருக்கிறது. அதாவது, இந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ளபடி எல்லாவிதமான துணேப் பொருள்களேயும் முழுமையாகத் தயாரித்து வைத்திருப்பவர்கள்தான் பயிற்சி முகத்திற்கு விரைந்து ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். இப் பேருண்மையினே எல்லோரும் பொறுப்புடனும், பொறுமையுடனும், நிதானத்துடனும் ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும். அப்படியல்லாமல் நம்மவர்களில் யாரும் தங்களுக்கு ஆரம்பப் பயிற்சி முகங்களிலேயே இடம் கிடைக்காமல் போய்விட்டது என்று வருந்தவோ, குறை கூறவோ, தளர்ச்சியடையவோ, கவலேப்படவோ முற்படக் கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது.

பயிற்சி முகத்திற்கு வரக் கூடியவர்கள் தங்களுக்கு வேண்டிய விரிப்பு, தலேயணே முதலியவைகளேத் தேவைக்கேற்ப எடுத்து வரவேண்டும். பெரும்பாலும் மேற்கு அண்ணுநகரில் இரவு தங்கிடல் நேரும். காலே 8 மணி முதல் இரவு 8 மணி வரை குருதேவர்

இல்லத்தில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ளல் வேண்டும்.

**குறிப்பு**:-

(i) வந்திருப்பவர்களில் யாரேனும் அ.வி.தி. பணிகளில் அநுபவம் மிக்கவர்கள் இருப்பார்களேயாஞல், அவர்கள் மற்றவர்களில் கணிசமான அளவினரையாவது தயாரிப்பவர்களாகச் செயல்பட வேண்டும். இதற்காகத்தான் இரவு நேரங்களில் மேற்கு அண்ணு நகர் இல்லத்தில் தங்கிக் கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல்கள் நிகழ்த்த வேண்டும். இந் நிகழ்ச்சியை விளேயாட்டாகவோ, பொழுதுபோக்காகவோ, கோப தாப வேக வெறிகளுக்குரியதாகவோ மாற்றிடக் கூடாது. அதாவது ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்ததை முழுமையாக அடுத்தவர்களுக்குக் கூறி அடுத்தவர்களுக்குத் தெரிந்ததை முழுமையாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

(ii) நம்மவர்களுக்குள் எக்காரணத்திஞலும் கருத்து வேறுபாடோ, மாறுபாடோ ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்காகத்தான் நம்மவர்கள் ஒருவரை ஒருவர் சன்னிதானம் என்று அழைத்தே பழக வேண்டும். இச் சொல்லேத் தவிர வேறு எச்சொல்லேக் கூறியும் ஒருவரையொருவர் அழைத்துக் கொள்ளக் கூடாது.

12) அன்ருடம் காலேயில் எழுந்ததும் எட்டு மணிக்குள் அண்ணுநகர் வீட்டிலேயே நீராடி முடித்து அந்த வட்டாரத்திலேயே காலேச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு தங்களிடம் உள்ள புத்தகங்களேயும், நோட்டுக்களேயும் பள்ளி செல்லும் மாணுக்கரைப் போலக் கையில் எடுத்துக் கொண்டு அம்பத்தூரில் உள்ள குருபீடத்திற்கு வர வேண்டும். இப்படிக் காலேயிலேயே சுறுசுறுப்பாக தங்களேத் தயாரித்துக் கொண்டு குருதேவரை நோக்கி வருவதால் பயிற்சி முகத்தில் கூறப்படுபவைகளேச் சுறுசுறுப்புடனும், விழிப்புடனும், ஆர்வத்துடனும், பொறுப்புடனும், பொறுமையுடனும் கேட்டுத் தெரிந்து, புரிந்து கொள்ளும் மனநிலே உண்டாகிடும். இதேபோல் மதிய

உணவிற்கு முன் ஒரு அரைமணி நேர இடைவேளையும், மதிய உணவிற்காகச் சுமார் ஒருமணி நேர இடைவேளையும் கொடுக்கப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதால் பயிற்சி வகுப்பில் பாடம் நடக்கின்ற நல்ல சூழ்நிலை உருவாகிடும்.

மாலையில் குறைந்தது ஒரு மணி நேரம் இடைவேளை சுவைநீருக்காக விடப்பட்டு மாலை 6 மணி முதல் 8 மணி வரை அன்றைய பாடத்தைப் பற்றிய கருத்தரங்கும், மறுநாள் நடக்க விருப்பவை பற்றிய கருத்தரங்குமாக வாத, விவாத உரையாடல்கள் நிகழும். இதனால் 8 மணிக்கு அம்பத்தூரிலிருந்து அண்ணாநகருக்குப் புறப்பட்டுச் செல்லும் வழியிலும், இரவிலும் பயிற்சிக்கு வந்திருப்பவர்கள் மனம் திறந்து மற்றவர்களோடு வாத விவாதங்கள் நிகழ்த்திடும் ஆர்வம் பிறந்திடும்.

13) இந்தப் பயிற்சி முகத்தில் பயிற்சி பெற்றுச் செல்பவர்கள் தனித்துத் தமிழகம் முழுவதும் பயணப்பட்டு நமது கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல்திட்டங்களையும் எடுத்து விளக்கிடக் கூடிய ஆற்றலையும், ஆர்வத்தையும், துணிவையும் பெற்றுத் திகழ்ந்திட வேண்டும். இதைச் சோதிப்பதற்காகவே பயிற்சி முகத்தின் கடைசியில் அதாவது ஞாயிறு பிற்பகலில் 10 அல்லது 15 மணித்துளிகள் எழுந்து நின்று சொற்பொழிவாற்றச் செய்து மதிப்பெண்கள் தரப்படும். அடுத்து இரண்டு அல்லது மூன்று கேள்விகளுக்கு வெள்ளைத் தாளில் பரீட்சை எழுதுவது போல் எழுத வேண்டும். அதை விரைந்து திருத்தி மதிப்பெண்கள் தரப்படும். பிறகு ஒவ்வொருவரையும் எழுப்பி நேரடி வினாக்கள் கேட்டு அவரது பதில் சொல்லும் ஆற்றல் சோதிக்கப்படும். இவற்றின் அடிப்படையில் தேர்வு நிலை, தேற வேண்டிய நிலை எனப் பிரிக்கப்பட்டு; தேற வேண்டிய நிலையினர் மீண்டும் ஒருமுறை பயிற்சி வகுப்பிற்கு வருவதற்குப் பரிந்துரைக்கப்படுவர். இப்படித் தேர்வில் மதிப்பெண்கள் கொடுத்து பயிற்சி முகத்திற்கு வந்திருப்பவர்களின் தேர்ச்சி நிலைகளை இரண்டு வகையாகப் பிரித்து கணக்கிடுவது யாரையும் புண்படுத்துவதற்காக அல்ல. இதன் அடிப்படையில் யாரும் கருத்து மாற்றம் கொள்ளக்

கூடாது. அதாவது, தேர்வு நிலையில் தேறிடுபவர்களுக்குச் சிறப்பு இருப்பதாகவோ அல்லது தேற வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்குச் சிறப்பு இல்லை என்றோ நினைத்திடக் கூடாது. இது தெய்வீகத் துறையோடு சம்பந்தமில்லாதது. அதாவது, **உலகியலோடு அவரவர் நினைவாற்றலையும், பேச்சாற்றலையும், எழுத்தாற்றலையும் எடையிட்டு மேலும் எம்முயற்சிகள் செய்ய வேண்டும் என அறிவுறுத்தப் படுவதற்காகவே**. எனவே **இப் பயிற்சி முகத்திற்கு வருகிறவர்கள் உலகியல் ஆற்றல்களை எடையிட்டுத் தெரிந்து கொள்ளவும்; அடுத்து என்னென்ன முயற்சிகளையும், பயிற்சிகளையும் செய்து தங்களைப் பேராற்றல் உள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்ளவுமே இப் பயிற்சி முகத்திற்கு வரவழைக்கப்படுகிறார்கள். இந்த அடிப்படைத் தத்துவத்தைப் பயிற்சி முகத்திற்கு வருகிறவர்கள் புரிந்து கொண்டால்தான் பயிற்சி முகத்திலே உண்மையான பயன்களும், நன்மைகளும் உண்டாகிடும்**.

14) பதினெண்சித்தர்களுடைய சித்தர் நெறியான சீவநெறி எனும் மெய்யான இந்துமதத்தில்தான் இந்நாட்டில் தோன்றக் கூடிய எல்லாவிதமான மதங்களையும் தன்னுடைய சேய் போல் ஏற்றுப் போற்றும் தாய் உள்ளம் இருக்கின்றது. அதாவது, இந்த மண்ணுலகில் எத்தனை எத்தனை ஆயிரமாயிரம் மதங்கள் தோன்றினாலும், அவற்றை யெல்லாம் ஏற்றுப் போற்றி அரவணைத்து வளர வைக்கும் பொதுப்பண்புடையதே இந்துமதம். ஏனென்றால், பதினெண்சித்தர் நெறி எனும் ஆலமரத்தில் புதிய புதிய கிளைகளாகவோ அல்லது விழுதுகளாகவோதான் எந்த மதமும் இம் மண்ணுலகில் தோன்றிட முடியும். ஏனென்றால், அருளுலகத்தில் அடிப்படை உண்மைகள் அனைத்தும், செயல் சித்தாந்தங்கள் அனைத்தும் முழுமையாகப் பதினெண்சித்தர்களுடைய சித்தர்நெறி எனும் சீவநெறியான மெய்யான இந்துமதத்தில் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் வழங்கப்பட்டு விட்டன. அதனால், இம் மண்ணுலகம் எனும் கனிமலர்ச் சோலையிலே மதம் என்று மலரக் கூடிய மலர்களும், கனிகளும் பதினெண்சித்தர்கள்

பயிரிட்ட பயிரினங்களின் பயனாகத்தான் அல்லது விளைச்சலாகத்தான் இருந்திட முடியும்.

இதைத்தான், குருபாரம்பரியம், **"பதினெண்சித்தர் நெறியெனும் வற்றாத ஆற்றின் இருகரைகளிலும் பயிராகக் கூடிய பயிரினங்களின் விளைச்சல்தான் இம்மண்ணுலகின் தத்துவங்களும், செயல் சித்தாந்தங்களும் ஆகும். மதங்கள் எனும் வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் தங்களிடம் உள்ள விளைச்சல் பொருள்களைப் பற்றி என்னென்ன கூறி விற்றாலும் சரி, அவையனைத்தும் சித்தர் நெறியெனும் ஆற்றின் இருகரைகளிலும் விளைந்தவையேயாகும். அதாவது எந்த வியாபாரி என்ன கூறி எந்த இடத்தில் எந்த விளைச்சல் பொருளை விற்றாலும் அவை அனைத்தும் சுவையிலும், பயனிலும் ஒரே மாதிரியாகத்தான் இருந்திடும். எனவே, எந்த மதமானாலும் சரி, அது மனித சமுதாயத்திற்கு நன்மை பயப்பதாகவேதான் இருக்குமே தவிர, வேறு எதுவாகவும் இருக்காது. இப் பேருண்மையினை உலக மக்கள் அனைவரும் புரிந்து கொண்டு விட்டால் மதப் பிரிவினைகளுக்கோ, வேறுபாடுகளுக்கோ, மாறுபாடுகளுக்கோ, முரண்பாடுகளுக்கோ, போட்டா போட்டிகளுக்கோ, சண்டை சச்சரவுகளுக்கோ இடமே இல்லை, இடமே இல்லை, இடமே இல்லை"** என்று தெளிவாகக் கூறுகிறது.

இதன்படிதான் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் அவர்கள் காலத்தில் உலகெங்கும் மதச் சமத்துவமும், சமாதானமும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும் ஏற்பட்டிட உழைத்திட்டார்கள். அப்படி அவர்கள் உலகம் தழுவிய பெரிய நிலையில் உழைத்த உழைப்பின் பயனாகத்தான் இன்றைக்கும் மனித சமுதாயத்தில் மதத்தின் மீது நம்பிக்கையும், பற்றும், பாசமும், விருப்பமும் தொடர்ந்து நிலைத்து வருகிறது. இல்லாவிட்டால், மண்ணுலகில் காலங்கள் தோறும் கணக்கற்றுத் தோன்றிடும் மத மறுப்பாளர்களும், வெறுப்பாளர்களும், எதிர்ப்பாளர்களும், பேராசைக்காரர்களும், தங்களுடைய வாழ்வின் வெற்றி

தோல்விகளுக்குரிய காரண காரியங்களை ஆராய்ந்து அறிந்து புரிந்து கொள்ள முடியாத ஆத்திரக்காரர்களும், முட்டாள்களும் மதம் என்ற ஒன்று இல்லாமலேயே செய்திருப்பார்கள். இந்த மெய்யான மத வரலாற்றை இன்றுள்ள மக்கள் முறையாகவும், தெளிவாகவும், விளக்கமாகவும் புரிந்து பயனடைய வேண்டும் என்பதற்காகத்தான் பதினெண்சித்தர் மடம் தன்னுடைய 48 வகை நிறுவன நிருவாகங்களையும் செயல்நிலையில் வைத்திருக்கிறது. இந்தச் செயல்நிலையின் பயன் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைய ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் பயிற்சி முகங்களைத் துவக்கியிருக்கிறார். இதில் பங்கு பெற்று பலரும் பயனடைய வேண்டும்; பயனடைபவர்கள் பிறர்க்கும் தாங்கள் பெற்ற நன்மைகளைக் கூற வேண்டும்.

15) **<u>பயிற்சி முகத்தின் தத்துவமும், செயல் சித்தாந்தமும்</u>**:

“நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்ற இந்தப் பதினெண்சித்தர்களுடைய தத்துவ வாசகத்தின் செயல்நிலைச் சித்தாந்தமாகத்தான் பயிற்சி முகங்கள் நடத்தப்படுகின்றன.

மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ வகை இன்பங்களை அடைகிறார்கள். அந்த இன்பங்களின் மூலம் நிம்மதியையும், நிறைவையும், அமைதியையும், வாழ்வியலில் அன்புநிறைந்த இனிய சூழ்நிலையையும், பிறருடைய ஆதரவையும், உதவியையும், ஒத்துழைப்பையும் பெற்றிட முயல்கிறார்கள். இம் முயற்சியில் ஏறத்தாழப் பெரும்பாலானவர்கள் தங்களுடைய எதிர்பார்ப்பில் மிகமிகக் குறைந்த அளவே வெற்றி பெற்றிடுகிறார்கள். இதனால்தான், மனித வாழ்வில் ஏறத்தாழ எல்லோராலுமே கடினமான ஒன்றாக, சிரமமான ஒன்றாக, தொல்லையான ஒன்றாக, துன்பமான ஒன்றாக, வெறுமை நிறைந்த ஒன்றாக வாழ்க்கையைப் பற்றி எண்ணப்பட நேரிட்டிடுகின்றது. இதனை மாற்றிக் கணிசமான அளவினராவது மனித வாழ்வு அரியது, பெரியது, சீரியது, புனிதமானது, தெய்வீகமானது, இனிமையானது, பொருள் நிறைந்தது, வளம் மிக்கது, பேரின்பம் பெற்றுத் தருவது,

பிறவாமை இறவாமை எய்துதற்கு உதவுவது, ஆவி ஆன்மா ஆருயிர் என்ற மூன்றையும் முழுமையாகப் புரிந்து பயன்படுத்திக் கொள்ள உதவுவது, இறைமையோடு உறவு பூண்டிட உதவுவது, இறைமையோடு இரண்டறக் கலக்கச் செய்வது, அன்பு ஊற்றெடுத்து ஆற்றுப் பெருக்காய் ஓடச் செய்வது, எல்லாவற்றிலும் இனிமையைக் காணச் செய்வது, ... என்று உணரும்படிச் செய்வதற்காகத்தான் பதினெண்சித்தர்களின் பயிற்சி முகங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

இந்தப் பயிற்சி முகங்கள் தமிழ்நாட்டில் தமிழர்களுக்கிடையில் தமிழ்மொழியில் மட்டுமே அதிகமாக நிகழ்த்தப்படுவதற்குக் காரணம், இன்றுள்ள தமிழ்நாடும், இதைச் சார்ந்த தென்னிந்தியப் பகுதிகளும்தான் இம்மண்ணுலகின் முதன்முதலில் தோன்றிய இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டத்தின் சிதைந்து சிதறிக் கிடக்கும் நிலப்பரப்பிலேயே மிகப்பெரிய ஒன்றாக இருப்பதுதான். அதாவது, பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகில் முதன்முதலில் தோன்றிய பெருநிலப் பரப்பான கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டத்தில்தான் தங்களுடைய அருளுலகத் தத்துவ வித்துக்களைப் பயிராக்கினார்கள். அதாவது, அண்டபேரண்டங்களிலிருந்து வந்திட்ட அனைத்துப் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், 48 வகையான வழிபடு நிலையினர்களும், 48 வகையான கடவுளர்களும் முதன்முதல் தங்கிச் செயல்பட்டிட்டது இந்தக் கடலுள் மறைந்த குமரிக்கண்டம் எனும் இளமுறியாக் கண்டத்தில்தான். எனவேதான், இந்த இளமுறியாக் கண்டத்தின் சிதைந்து கிடக்கும் நிலப்பகுதிகளில் எல்லாம் அருள் ஊற்றுக்களும், அருட்பயிரின உயிரினங்களும் மிகுதியாக இருக்கின்றன. இதனால்தான் விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள தென்னிந்தியா அருளுலகில் மிகச் சிறந்த வளமான பயன்மிக்க நாடாகக் கருதப்படுகிறது. இதிலும், பதினெண்சித்தர்களுடைய தாய்மொழியான அண்டபேரண்ட ஆட்சி மொழியாக விளங்குகின்ற அமுதச் செந்தமிழ் மொழி வாழுகின்ற தமிழ்நாடுதான் தொடர்ந்து ‘கடவுளர் நாடாக’, ‘தெய்வீகத் திருநாடாக’, ‘அருளுலகக் கருவறையாக’, ‘அருளுலகப் பயிரினங்களின் விதைப்பண்ணையாக, நாற்றங்காலாக’, ‘அருளுலக

உயிரினங்களின் பிறப்பிடமாகத் தாயகமாக'ப் ... பயன்படுத்தப்பட்டு வருகிறது அல்லது பயன்படுகிறது.

இப்பேருண்மையின் செயல்நிலை விளக்கமாகத்தான் என்றென்றைக்கும் தமிழகத்தில் பரவலாக அருளாளர்கள் தொடர்ந்து தோன்றிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனாலும், இப்படித் தோன்றக் கூடிய அருளாளர்களுக்கிடையில் உலகியலுக்கேற்ற முயற்சிகள் மிகுதியாக வெளிப்படாமல் போய்விடுகின்ற காரணத்தினால்தான் அருளுலகத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும், தத்துவ வித்துக்களாகவும் தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கிடையில் ஒற்றுமையும், பற்றும், பாசமும், சமத்துவமும், சகோதரத்துவமும், ஒருமித்த செயலும் நிலையாக விளைந்திட முடியவில்லை. இந்த மாபெரும் உண்மையை எண்ணிப் பார்த்துத்தான் தமிழின, மொழி, மத விடுதலைக்காகவும், தமிழர்களுடைய இந்துமத மறுமலர்ச்சிக்காகவும், அண்டபேரண்ட அருளுலகின் ஆட்சி மொழியான தமிழ்மொழியின் வளவளர்ச்சிக்காகவும், தமிழகத்தில் உள்ள அருளூற்றுக்களான 48 வகைப்பட்ட கருவறைகள், 48 வகைப்பட்ட வெட்டவெளிக் கருவறைகள், 48 வகைப்பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகள் ஆகிய 144 வகைப்பட்ட கருவறைகளையும் புத்துயிர்ப்புச் செய்யும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்திற்காகவும் தேவையான செயல்வீரர்களான சித்தரடியான்களையும், சித்தரடியாள்களையும், சித்தரடியார்களையும் உருவாக்குவதற்காகவே இப் பயிற்சி முகம் நடத்தப்படுகிறது.

எனவே, இன்று வாழக் கூடிய தமிழர்களில் சிறாஅர், இளைஞர், நடுத்தர இளைஞர், முதியோர் என்ற வயது வேறுபாடோ அல்லது ஆண் பெண் என்ற வேறுபாடோ இல்லாமல் அனைவருமே இப் பயிற்சி முகத்தில் அக்கரையும், ஆர்வமும் காட்டிடல் வேண்டும். அப்பொழுதுதான் விரைந்து உலகம் தழுவிய அருளுலகப் பொருளுலக இருளகற்றும் பணியும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுப் பணியும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் பணியும், உலக மானுட மேம்பாட்டுக்கு உரிய அருளாட்சி அமைப்புப் பணியும் மிகக் குறுகிய காலத்தில்

மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றிட முடியும். இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்துத் தமிழகத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் பதினெண்சித்தர்களுடைய தத்துவங்களும், செயல் சித்தாந்தங்களும் பரவிடப் பாடுபட வேண்டும். அதற்குரிய ஆக்கப் பூர்வமான செயல்திட்டமாகத்தான் இப்பொழுது பயிற்சி முகம் தொடங்கப்-பட்டிருக்கிறது.

எனவே, பயிற்சி முகம் பற்றிய **இந்த விளக்கக் கட்டுரையையாவது** பயிற்சி முகத்திற்கு வருவதற்கு முன்னால் ஒவ்வொருவரும் கூடுமானவரை பலமுறை நன்கு படித்து மனப்பாடம் செய்து கொண்டு வர வேண்டும். இது பற்றிய ஆய்வு (Test or Examination) பயிற்சி முகத்திற்கு வரக் கூடியவர்களுக்கு முதல் நாளிலேயே நேரடிக் கேள்விகள் மூலமும், எழுத்து மூலமும் வைக்கப்படும். இத் தேர்வுகளில் கணிசமான அளவு தேர்ச்சி பெற்றவர்கள்தான் எல்லாப் பயிற்சிகளிலும் பங்கு பெற அநுமதிக்கப்படுவார்கள். அதாவது கணிசமான அளவு தேர்ச்சி பெறாதவர்கள் ஒருசில பயிற்சி வகுப்புகளுக்கு மட்டுமே அநுமதிக்கப்பட்டு மற்ற நேரங்களில் உடல் உழைப்புக்குரிய வேலைகளைச் செய்ய ஆணையிடப்படுவார்கள். அதற்காக, அவர்கள் வருத்தப்படக் கூடாது. அதாவது, கருகுலத்தைத் துப்புரவு செய்தல், அங்குள்ள செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுதல், பூசைகளுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல், பயிற்சி முகத்திற்கு வந்திருப்பவர்களுக்குத் தேவையான பணிகளைச் செய்தல், நகல்கள் எழுதுதல்.... முதலிய உடலுழைப்புப் பணிகள் தரப்படும். இதுபற்றி யாரும் வருத்தப்படக் கூடாது. கவலைப்படக் கூடாது. எனவே, இப் பயிற்சி முகம் பற்றிய அறிவிப்பினை எல்லோரும் பலமுறை திருப்பித் திருப்பிப் படித்து மனப்பாடம் செய்து கொள்ள வேண்டும்.

16) **பயிற்சி முக நடைமுறைகள்**:-

16.1) பல்வேறு வகையான சுவையுணர்வு உடையவர்கள் பயிற்சி முகத்திற்கு வந்தாலும் பயிற்சி முகத்திற்குரிய நாட்களில்

எல்லோருடனும் சேர்ந்து, கிடைக்கக் கூடிய உணவை ஏற்றுக் கொள்ள வேண்டும். இருந்த போதிலும் அவரவர் விரும்பிய உணவை வெளியில் சென்று சாப்பிட்டுக் கொள்ள அநுமதிக்கப்படுவர். இந்த அநுமதியை எல்லோரும் தவறுகப் பயன்படுத்தி விடக் கூடாது.

**குறிப்பு**:- எல்லோருக்கும் ஒரே ஒரு உண்டிச் சாலையில் ஏற்பாடு செய்யலாம். அல்லது பயிற்சி முகத்திற்கு வருபவர்கள் அனைவருக்கும் பயிற்சி முகம் நடைபெறும் இடத்திலேயே சமையல் செய்யலாம். இது பற்றி பயிற்சி முகத்திற்கு வருவதற்கு முன்னுல் தங்களுக்கு அறிவிக்கப்படும்.

16.2) பயிற்சி முகத்திற்குப் புறப்பட்டு வருவது முதல் வீடு போய்ச் சேர்ந்து நிறைவு பூசை செய்யும் வரை எல்லோருமே குருதி வண்ணச் சிவப்பாடைதான் அணிந்திருக்க வேண்டும். இதில் யாரும் எந்தவிதமான விதிவிலக்கும் எதிர்பார்க்கக் கூடாது.

16.3) பயிற்சி முகத்திற்கு வருபவர்கள் அவரவர் உயரத்திற்கு திரிசூலம் கொண்டு வர வேண்டும் என்று கூறப்படுவதற்குக் காரணம் அருளுலகப் பயிற்சி பெறுகிறவர்களுக்கு அதுவே சிறந்த பாதுகாப்பாகவும், அருளைப் பிறர்க்கு வழங்குவதற்குச் சிறந்த சாதனமாகவும், அனைத்து வகைப்பட்ட கருவறைகளிலும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதற்கு அறிமுக ஏடாகவும் பயன்பட்டிடும்.

இதை எளிதாக எடுத்து வருவதற்காக திரிசூலத்தை மட்டும் அவ்வப்போது கழட்டி மாட்டுகின்ற மாதிரியோ அல்லது முழு திரிசூலத்தை நாலைந்து பகுதிகளாகக் கழற்றி மாட்டுகின்ற மாதிரியோ செய்து கொண்டால் நல்லது. ஏற்கனவே சித்தரடியானுக, சித்தரடியாளாக, சித்தரடியாராகச் செயல்படுபவர்கள் தங்கள் தங்களுக்குரிய மெய்ஞ்ஞானக் கொடியையும், மயில் பீலியையும் கட்டாயமாகக் கொண்டு வர வேண்டும்.

புதிதாக வரக்கூடியவர்களின் தேர்ச்சி நிலைகளுக்கேற்ப இந்த மெய்ஞ்ஞானக் கொடியும், மயில் பீலியும் தரப்படும். எனவே, புதிதாக வரக்கூடியவர்கள் யாரும் தமக்கு மெய்ஞ்ஞானக்கொடி இல்லையே,

மயில்பீலி இல்லையே அல்லது தரப்படவில்லையே என்று வருத்தப்படவோ, குறை கூறவோ முற்படக் கூடாது.

**குறிப்பு**:- இதைப் படித்து முடித்தவர்கள் வேறு ஏதேனும் புதிய கருத்துக்களேயோ, செயல்திட்டங்களேயோ கூற விரும்பினுல் உடனடியாகத் தலைமைப்பீடத்திற்கு எழுதுங்கள்.

எல்லாம் நன்மையாகட்டும், வெற்றியாகட்டும், உண்மையாகட்டும்.
அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே.
அனைத்துக்கும் அம்மையப்பன்களின் இனிய துணையே.
ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்
ஓம் தென்னுடுடைய சீவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
ஓம் அர அற நமப் பார்வதி பாதமே போற்றி!
ஓம் அர அற மகாதேவப் பாதமே போற்றி!

**அருளாணை பெற்ற குருவாணை**

**தலைவர், குருதேவர், இந்துமதத் தந்தை, ஞானுச்சாரியார்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
**பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்,**
**G.N.T.சாலை, காரனோடை, சென்னை-600067.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூல நகல்: சித்தரடியார் சுந்தரராமன் மற்றும், சித்தரடியார் திரு செயக்குமார் ஆகியோர் கையெழுத்தில் இருந்தது.//**

# பதினெண்சித்தர் மடம், பீடம், பயிற்சிப் பள்ளி

**தலைவர்:-** ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, குருதேவர், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.
**தலைமைப் பொறுப்பாளர்:** சித்தரடியான் சி.கவிக்குமார்.
**கொள்கை பரப்புச் செயலாளர்:** சித்தரடியார் பெ.சுப்பையா.
**நிறுவன அமைப்புச் செயலாளர்:** சித்தரடியார் ச.துரைராசு.
**நிருவாக அமைப்புச் செயலாளர்:** சித்தரடியார் வெ.சுந்தரராமன்.
**பதிப்பகச் செயலாளர்:** சித்தரடியார் இரா.சீனிவாசன்.
**திட்ட அமைப்புச் செயலாளர்:** சித்தரடியார் த.பொன்னுச்சாமி.

## குறிக்கோள்

இன்றைய நிலையில் நம் தாயக உரிமை வாழ்வுக்கும், பெருமை வாழ்வுக்கும், இன விடுதலைக்கும், மொழி விடுதலைக்கும் மதம் தேவைதானா? மதமின்றிச் செயல்பட முடியுமா?; மதவழிச் செயல்பாடுகளின் இன்றைய நிலை என்ன? மதத்துறையில் தேவையான மாற்றங்கள்; மதவழிச் செயல்பாடுகளில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள்; மதம் மறப்புக்கும், துறப்புக்கும், மறுப்புக்கும், வெறுப்புக்கும், புறக்கணிப்புக்கும், எதிர்ப்புக்கும் உரிய காரணங்களை ஆராய்தல்; ஆராய்ச்சியின் அடிப்படையில் பரிகாரங்களைத் தேடுதல்.

## செயல்தத்துவம்

நமக்குத் தமிழக அரசியல் விடுதலையில் நம்பிக்கை இல்லை; நாம் விரும்புவது சமுதாய விடுதலை; அதுவும், சமூகங்களின் விடுதலை, குடும்பங்களின் விடுதலை, தனிமனிதர்களின் விடுதலை முதலியவையே ஆகும். இதற்காக நாம் துணையாக அல்லது வழியாகக் கையாள விரும்புவது சமயமே ஆகும். இந்த நூற்றாண்டில்

தமிழின விடுதலேக்கு என இயக்கங்கள் செயல்பட்டிருக்கின்றன. ஆனால், அவையனைத்தும், தங்களுடைய வடிவமைப்புக்களேயும், வாழ்வியல் நிலேகளேயும் பெருமளவு இழந்து சாதனே ஏதும் இன்றிச் சமாது நிலேயில் இருக்கின்றன. இதேபோல், மொழி விடுதலேக்கெனத் தனிமனிதர்களும், இயக்கங்களும் எழுந்தனர், செயல்பட்டனர். ஆனால், இவர்கள் தங்களுக்குக் கிடைத்த அற்ப சொற்ப வெற்றியின் பயன்களேத் துய்ப்பதில் காட்டிய போட்டா போட்டியும், பேராசையும் இவர்களே நலிந்து, மெலிந்து, தேய்ந்து, ஓய்ந்து போகச் செய்து விட்டன. எனவே, இன்றைய நிலேயில் தமிழர்களுக்கிடையில் இன விடுதலேக் கருத்துக்களுக்கோ அன்றி மொழி விடுதலேக் கருத்துக்களுக்கோ ஏறத்தாழ எள்முனேயளவு ஆர்வம் கூட ஏற்பட முடியாத நிலேயே இருக்கின்றது, இருக்கின்றது, இருக்கின்றது. இதுதான் நமது தாயகத்தின் விடுதலே உணர்வின் உண்மையான நிலே.

எனவே, நமது தாயகத்தில் விடுதலே வாழ்வு! உரிமை வாழ்வு! பெருமை வாழ்வு! தன்னுட்சி வாழ்வு! பண்பாட்டுப் பெருமித வாழ்வு! நாகரிகப் பெருமித வாழ்வு! இலக்கியப் பெருமித வாழ்வு! வரலாற்றுப் பெருமித வாழ்வு! ... எனப்படுவனவற்றில் எந்த வாழ்வுக்கும் பொருளே இல்லே. வருங்காலத்தில் எவ்விதப் பயனும் இல்லே. அதாவது மிகமிக விரைவில் தமிழினம், தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழர் வரலாறு, தமிழிலக்கியம், தமிழ்க் கலே, தமிழ்நாடு, ... எனும் சொற்களுக்கே பொருளில்லாமல் போய்விடும். இன்னும் சொல்லப் போனுல், இச்சொற்களுக்குத் தமிழர்களுக்கே பொருள் தெரியாத நிலே உருவாகிடும். இதுதான், இன்றைய நமது தாயகத்தின் உண்மையான நிலே. ஆனுல், இன்றைய நமது அரசியல், கலே, இலக்கியவாதிகளோ தமிழின ஒற்றுமை பற்றியும், தமிழ்மொழியின் உரிமை பெருமை பற்றியும் வானளாவப் பேசி வீண்பொழுது போக்கி வருகிருர்கள். இவர்கள் தாங்களும் ஏமாந்து, பிறரையும் ஏமாற்றி வருகிருர்கள். இவற்றிற்கு விடை தேடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது பதினெண்சித்தர் மடம். அந்த முயற்சியின் ஓர் அங்கமாகவே அமைகிறது இந்தப் பயிற்சிப் பள்ளி.

# பதினெண்சித்தர் மடப் பயிற்சி முகம் (முகாம்)

## மும்முனைப் போர்த் தத்துவ விளக்கம்

இன்றைய கலை, இலக்கிய, சமுதாய, அரசியல் வாதிகள் அனைவருமே ஏறத்தாழ மதத்தைக் கண்டு பயப்படுகிறவர்களாகவே இருக்கிறார்கள். இதற்குக் காரணமே, மேற்படிக் கலை, இலக்கிய, சமுதாய, அரசியல் வாதிகளில் யாருக்குமே மதத்தைப் பற்றி எதுவுமே தெரியாததுதான். இன்னும் சொல்லப் போனால், மேற்படி நான்கு வகையினரில் யாருக்குமே மதத்துறையை முறையாகத் தெரிய, அறிய, புரிய, ஆராய்ந்து தெளிந்திட, உணர்ந்திட, உணர்ந்ததை ஏற்றிட, ஏற்றிட்டதைத் துணிந்து செயலாக்கிடப் பொறுமையில்லை, பொறுப்பில்லை என்பதுதான் உண்மை. ஆனால், மேற்படி நான்கு வகையினருமே மேலெழுந்த வாரியாகத் தங்களுக்கு மதத்தைப் பற்றித் தெரிந்த அல்லது தாங்கள் கேள்விப்பட்ட செய்திகளை வைத்துக் கொண்டே கற்பனைவாதிகளாக மதத்தை அழிக்கவும் ஒழிக்கவும் முயலுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், இவர்கள் மதத்திடம் தங்களுக்குள்ள அச்ச கூச்ச மாச்சரியங்களாலும், அறியாமைகளாலும்; கண்மூடித்தனமாக மதத்தின் மீது வெறுப்பையும், மறுப்பையும், எதிர்ப்புணர்வையும் வளர்த்துக் கொண்டு விட்டார்கள்.

எனவேதான், இந்த நான்கு வாதிகளும் மதத்தால்தான் நம் தாயகத்தில் உள்ள வீழ்ச்சி நிலைகளும், தாழ்ச்சி நிலைகளும், தளர்ச்சி நிலைகளும், சூழ்ச்சி நிலைகளும், அயர்ச்சி நிலைகளும், சுரண்டல் நிலைகளும், அடக்க ஒடுக்க அடிமைநிலைகளும், தேக்க வீக்க முடக்க நிலைகளும் அகலாமல், அகற்றப்படாமல், அகற்ற முடியாமல் இருக்கின்றன என்ற கருத்தைப் பெற்றிருக்கிறார்கள். இக்கருத்தின் அடிப்படையில்தான் இவர்கள் மதத்தைக் கண்மூடித்தனமாக மறுக்கவும், வெறுக்கவும், எதிர்க்கவும், இழித்துரைக்கவும், அழிக்க முற்படவுமாகச் செயல்படுகிறார்கள். இவர்களுடைய இந்த

வெறித்தனமான நோக்குகளுக்கும், போக்குகளுக்கும் கணிசமான அளவு நம் சமுதாயத்தில் வரவேற்பும் இருந்து வருகிறது.

ஆனாலும், இவர்களாலோ, இவர்களுக்கு வரவேற்புத் தருபவர்களாலோ நமது தொன்மைமிகு பழம்பெரும் மதத்துறையை ஊசிமுனை அளவு கூட அசைக்க முடியவில்லை. ஆனால், நம் நாட்டுக் கலை, இலக்கிய, சமுதாய, அரசியல் வாதிகளான நால்வருமே **நமது நாட்டின் சொந்த மதமான இம் மண்ணுலகின் முதல் மதமும், மூலத் தத்துவ மதமும், மூத்த மதமுமான மெய்யான இந்துமதத்தை** மட்டுமே தாக்கித் தகர்க்க முற்படுபவர்களாக இருக்கிறார்கள். எனவே, இவர்களுக்கு வேற்று மதத்தவர்களும், மாற்று வேதத்தவர்களும், அன்னிய மதத்தவர்களும் மிகத் துணிச்சலாக, நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏராளமான உதவிகளைத் தாராளமாகத் தந்து கொண்டிருக்கிறார்கள். அதாவது, நமது நாட்டின் மேற்படி நான்கு வகையான வாதிகளும் நமது மெய்யான இந்துமதம் எனும் ஞானத்தை, அகஞானத்தை, புறஞானத்தை, மெய்ஞ்ஞானத்தை, விஞ்ஞானத்தை தெரிந்தோ தெரியாமலோ அல்லது புரிந்தோ புரியாமலோ அல்லது கையூட்டுப் பெற்றோ பெறாமலோ சிறுபிள்ளைத்தனமாக விளையாட்டுப் போக்கில் சிதைக்கவும், சீரழிக்கவும் முற்பட்டு வருகிறார்கள்.

ஆனால், இவர்களின் முயற்சிகள் தமிழகத்தின் தென்கோடியில் இருக்கும் கன்னியாகுமரி முனைக் கடற்கரையில் உள்ள பாறைகளைத் தகர்க்க முற்பட்டுத் தொடர்ந்து தலைதாழ்த்தி வருத்தத்தோடு வணங்கித் திரும்பும் கடல் அலைகளைப் போலவே இருக்கின்றன. இப் பேருண்மையினைத்தான் இன்றைய நமது இளைஞர் சமுதாயம் எண்ணற்ற ஏடுகளில் எழுதியும்; நாள்தோறும் கணக்கற்ற பொது இடங்களிலும், பொது மேடைகளிலும், வழிபாட்டுக் கூடங்களிலும் எடுத்து விளக்கிக் கூறியும் செயல்பட வேண்டும். இத்தகைய பணியினை நம் காலத்து இளைஞர்கள் செய்யத் தவறுவார்களேயானால் நமது நிகழ்காலம் பழிகள் நிறைந்ததாகவும், பயனற்றவைகள் மிகுந்ததாகவும், சமூகநலத் துரோக விரோதச் செயல்களை வளர்த்ததாகவுமே ஆகிவிடும்.

நம் காலத்துப் பெரியவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது கடைசி முடிவை எண்ணிக் கலங்கிப் புலம்பி அரற்றுபவர்களாகவே இருக்கிறார்கள். இதேபோல், நம் காலத்திய நடுத்தர வயதினர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய வாழ்நாளின் கடமைகளை ஓரளவாவது சரிவர நிறைவேற்ற வேண்டும் என்ற கடமை வெறியால் தங்களைப் பற்றிய தன்னல உணர்வுகளைத் தவிர வேறு எந்தவித உணர்வுமே இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். அதாவது, நமது நடுத்தர வயதினர்களில் பெரும்பாலானவர்கள் சரியான தொழிலோ, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முறையான வருமானமோ பெறாமல் எரிச்சலும், ஏக்கமும், ஏமாற்றமும் மிகுந்தவர்களாகவே இருக்கிறார்கள். இப்படி நமது முதியவர்களும், நடுத்தர வயதினர்களும் நமது தாயகத்திற்குரிய தொன்மைமிகு பழம்பெரும் பயன்மிகு பண்பாட்டையும், நாகரிகத்தையும் வளர்க்கும் சமூக விஞ்ஞானமான நமது இந்துமதத்தைப் பற்றிய அடிப்படை ஆரம்ப அறிவைக் கூடப் பெறாதவர்களாக, பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

எனவேதான், இவர்களுக்கு நமது தாயகத்து மக்களிலேயே பெரும்பாலானவர்கள் நமது உய்வுக்கும், உயர்வுக்கும், தூய்மைக்கும், வாய்மைக்கும், நிலைத்த சமுதாயக் கட்டுக்கோப்பிற்கும், பண்பட்ட வாழ்வியல் பழக்க வழக்க நம்பிக்கைகளுக்கும், செயல் ஒழுங்குக்கும், சட்டதிட்ட நெறிமுறைக்கும், கொள்கைக்கும், குறிக்கோளுக்கும், கோட்பாட்டுக்கும் வழியாக வழி காட்டியாக வழித் துணையாக வழிப் பயனாக வாழ்ந்து வரும் மெய்யான இந்து மதத்தை நம்மவர்களே சிதைத்துச் சீரழிக்க முற்படுவதைக் கண்டும் காணாதவர்களாக வாழுகிறார்கள்.

இப்படிப்பட்ட வருந்தத்தக்க நமது தாயக நிலையை எண்ணி எண்ணி, வருந்தி வருந்தித்தான் காலங்கள் தோறும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் ஞானாச்சாரியார்களாக, குவலய குருபீடங்களாக, தத்துவ நாயகங்களாக, அருட்கொடை வள்ளல்களாக தோன்றிச் செயல்பட்டு வருகிறார்கள். இருந்த போதிலும், நான்கு யுகங்களாக இவர்கள்

ஆற்றி வந்துள்ள பணி இந்தக் கலியுகத்தில்தான்; அதுவும், கலி பிறந்து 1359 ஆண்டுகள் கழித்து இந்த இந்து மத இந்தியாவிற்குள் நுழைந்த பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியரால்; நான்கு யுகமாக வாழ்ந்து வரும் பதினெண்சித்தர்களுடைய சித்தர் நெறி எனும் சீவநெறியான மெய்யான இந்து மதம் மிகமிகப் பெரிய பெரிய சிதைவுகளேயும், திருத்தங்களேயும், இடைச்செருகல்களேயும், கவைக்குதவாத கற்பனேகளேயும், கதைகளேயும், மூடநம்பிக்கைகளேயும், கண்மூடிப் பழக்க வழக்கங்களேயும் பெற்று வடிவ நிலேகளிலும், வாழ்வியல் செயல்நிலேகளிலும் மிகப் பெரிய பாதிப்புக்களேப் பெற்று விட்டது.

இத்தகைய இக்கட்டான நிலேயில்தான் குவலய குருபீடமாக, இந்துமதத் தந்தையாக, ஞாளுச்சாரியாராகத் தோன்றியுள்ள பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்; அடுத்துத் தோன்ற இருக்கும் (36) முப்பத்தாறு பதினெண்சித்தர் பீடாதிபதிகள் அதிகம் சிரமப்படாதிருக்கும் வண்ணம் மெய்யான இந்துமதத்தின் முழுமையான வரலாற்று நூல்களேயும், இலக்கியங்களேயும், தத்துவங்களேயும், செயல் சித்தாந்தங்களேயும், அருட்கலேகளேயும், அருளாளர்களேயும், ... மக்கள் நன்கு உணரும் வண்ணம் அனேத்தையும் செயல்வடிவம் பெறச் செய்து வருகிருர்கள். இம் மாபெரும் பணியின் ஓர் அங்கமாகவே இந்தப் பயிற்சி முகாம்கள் அமைகின்றன.

இப் பயிற்சி முகாம்களில் தனிமனிதர்கள் தங்களே அருளாளர்களாக ஆக்கிக் கொள்ளவும், பிறருக்கு அருளே அநுபவப் பொருளாக வழங்கிடவும் தேவையான ஏட்டறிவும், பட்டறிவும் வழங்கப்படுகிறது. எனவே, வருபவர்கள் தங்களே முழுமையான சன்னிதானங்களாக உடை, திரிசூலம், மெய்ஞ்ஞானக்கொடி, மயில்பீலி, குறிப்பேட்டுப் புத்தகம், எழுதுகோல், முடிந்தால் இதுவரை தாங்கள் வாங்கியுள்ள பதினெண்சித்தர் மடத்தின் பதிப்புக்கள், கையெழுத்துப் பிறதிகள் முதலியவற்றுடன் வந்து சேர வேண்டும். வருகிறவர்கள் பொறுப்போடும், பொறுமையோடும் உழைத்துத் தங்களுடைய சந்தேகங்களேயும்,

தங்களுடைய வட்டாரத்தாருடைய சந்தேகங்களையும் மிகத் தெளிவாக, நேரடியாக, ஒன்றன்பின் ஒன்றாக எல்லோருக்கும் புரியும் வண்ணம் வினாக்களாக எழுதித் தொகுத்திடல் வேண்டும். முடிந்தால் இத்தொகுப்பை முன்கூட்டியே தலைமைப் பீடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இதேபோல், இவ் வினாக்களுக்குப் பயிற்சி முகாமில் வழங்கப்படும் பதில்களைப் பொறுப்போடும், பொறுமையோடும் கேட்டுத் தெளிந்து தெரிந்து விளக்கமாக எழுதிச் சென்று தங்கள் வட்டாரத்தில் விளக்கிட வேண்டும். இது மட்டுமல்ல, பயிற்சி முகாமிற்கு வந்து செல்லுபவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய வட்டாரங்களில் பயிற்சி முகாமை நடத்தக் கூடிய ஆற்றலைப் பெற்றவர்களாகத் தயாராகிடல் வேண்டும். அதாவது, பயிற்சி முகாமில் குருதேவரின் அருளைப் பெற்றுச் செல்லுதற்காக மட்டுமோ, அல்லது எப்படிப் பூசைகளைச் செய்து மந்திரித்து அருட்பணி ஆற்ற வேண்டும் என்பதற்கு மட்டுமோ ஆர்வம் கொண்டு குறுகிய போக்கிலும், நோக்கிலும் பயிற்சி முகாமிற்கு யாரும் வந்து விடக் கூடாது என்று அறிவிப்பு இதன் மூலம் வழங்கப்படுகிறது.

இந்தப் பயிற்சி முகாமின் மூலம், அமராவதி ஆற்றங்கரைக் கரூர் பசுபதீசுவரர் கோயிலைக் கட்டிய பத்தாவது ஞானாச்சாரியார் அவர்கள் தோற்றுவித்த இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும்; அதன்கீழ் உருவாக்கப் பட்ட அருட்பணி விரிவாக்கத் திட்டம், தமிழின மொழி மத விடுதலை இயக்கம், முத்தமிழ்ச் சங்கம், ... முதலிய 48 வகையான நிறுவன நிருவாகங்களையும் வளர்க்கக் கூடிய பேராற்றல் மிக்கவர்கள் தயாராக வேண்டும். அப்பொழுதுதான் உலகெங்கும் பரந்து கிடக்கும் ஏழரைக் கோடிக்கும் மேற்பட்ட தமிழர்களின் அக வாழ்விலும், புறவாழ்விலும் மலர்ச்சி, வளவளர்ச்சி, வலிமைச் செழிச்சி, ஆட்சிமீட்சி, பெருமைக்குரிய உரிமைப் பாதுகாப்பு, ... முதலியவைகள் அனைத்தும் விளைந்திடும், விளைந்திடும், விளைந்திடும்.

அதன்மூலம்தான், அருளுலக மூலவர்களாகவும், காவலர்களாகவும், வாரிசுகளாகவும் உள்ள தமிழர்களால்; ‘உலக ஆன்மநேய

ஒருமைப்பாடு', 'உலக ஒற்றுமை', 'உலக அமைதி', 'உலகச் சமாதானம்', 'உலக இன மொழி மத விடுதலை', 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்', 'உலக மானுட நல உரிமைப் பாதுகாப்பு', ... முதலியவை விரைந்து செயலாகிடும், செயலாகிடும், செயலாகிடும். ... செயலாக்கப் பட்டிடும்! செயலாக்கப் பட்டிடும்! செயலாக்கப் பட்டிடும்!

**தலைவர், குருதேவர், தத்துவநாயகம்,**
**இந்துமதத் தந்தை, ஞானச்சாரியார், நிறையக்ஞர்,**
**குருமகா சன்னிதானம்,**
**ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**
**பதினெண்சித்தர் மடம் பீடம் கருகுலம்,**
G.N.T.சாலை, காரனோடை, சென்னை-600067.

**தொடர்பு:-**

ஞானகுரு சித்தர் கருவூரார்,
13, குமாரசாமித் தெரு,
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-600053.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரராமனின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து வேத விடுதலை முழக்கம்

.. .. .. பத்தொன்பதாம் (19) நூற்றுண்டில் வாழ்ந்த சந்திர குலத்திற்குரிய சித்தர் கருவூரர் பாரம்பரியத்தில் தோன்றிய கண்டப்பகோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமி பிள்ளையவர்கள் ஆசியாக் கண்டம் முழுவதும் மட்டுமின்றி, உலகம் முழுவதும் தேடி அலைந்து இந்து வேதத்தையும், இந்து வேத வரலாற்றையும் பற்றிய பல பேருண்மைகளைத் தொகுத்திட்டார். அப்பேருண்மைகள் இந்து வேத விடுதலை முழக்கத்தை பிறப்பெடுக்கச் செய்தன.

ஆனால் சித்தர் ஏளனம்பட்டியாரோ 'முதல் இந்திய விடுதலைப் போர்' எனப்படும் <u>சிப்பாய்க் கலகத்தி</u>ன் கதாநாயகராக, உயிர் மூச்சாக செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதால், இந்து வேத விடுதலை முழக்கம் இந்து வேத மத நாடான **இந்தியாவின் விடுதலை முழக்கமாக** மாறிற்று.

ஆனால் இவருடைய சம காலத்தவரான அருட்பெருஞ்சோதி ஆண்டவர், அருட்பாக் கொடை வள்ளல், வடலூர்ப் பெருவெளி வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார் அவர்கள் ஹிந்து வேதத்தையும், ஹிந்து வேத ஆகமத்தையும், சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகளையும், கோத்திர நம்பிக்கைகளையும் கடுமையாகச் சாடித் தகர்த்து மெய்யான இந்து வேத விடுதலைக்குரிய **'இந்து வேத விடுதலை முழக்கத்தை'** எழுப்பினர். அந்த இந்து வேத விடுதலை முழக்கம்தான் ஆத்திகர்களையும், நாத்திகர்களையும் இந்து வேதம் பற்றிச் சிந்திக்கச் செய்தன. .. .. ..

**//1993 ஏப்ரல் 7 தேதியிட்ட இந்து ஆரணம் முதல் இதழில் 'இந்து வேத விடுதலை' என்ற தலைப்பில் வெளி வந்த கட்டுரையின் ஒரு பத்தி.//**

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040)...



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி

...பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த **ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."

- குருபாரம்பரிய வாசகம்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-